ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2018.11.29 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2018 செத்தெம்பர்

### பொதுநோக்கு

2018 செத்தெம்பரில் இலங்கையின் வெளிநாட்டுத் துறை அழுத்தமொன்றிற்கு உட்பட்டது. வர்த்தகக் கணக்கில் காணப்பட்ட விரிவடைந்த பற்றாக்குறை மற்றும் சொத்துப்பட்டியல் முதலீடுகள் வெளிச்செல்வதற்கு காரணமாக அமைந்த ஐ.அ.டொலர் வலுவடைந்தமை என்பன இம்மாதத்தில் சென்மதி நிலுவையினை மோசமாகப் பாதித்தன. ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்து நான்காவது மாதமாக ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சிக் காணப்பட்ட போதும் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சி ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்பை விஞ்சிக் காணப்பட்டது. நிதியியல் கணக்கில், அரச பிணையங்கள் சந்தையின், வெளிநாட்டு முதலீடுகள் உலகளாவிய நிதியியல் சந்தைகள் உறுதியடைந்தமைக்கு பதிலிறுத்தும் விதத்தில் வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தன. அதேவேளை, கொழும்பு பங்குப் பரிவர்த்தனையும் செத்தெம்பர் மாதத்தில் வெளிநாட்டு முதலீடுகளில் ஒரு சில வெளிப்பாய்ச்சல்களைக் காட்டியது. இதன்விளைவாக ஆண்டின் முதல் எட்டுமாத காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 5.3 சதவீதத்தினால் தேய்வடைந்த இலங்கை ரூபா செத்தெம்பரில் மேலும் 4.6 சதவீதத்தினால் தேய்வடைந்து உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் மீது அழுத்தமொன்றைப் பிரதிபலித்தது. இவ்வபிவிருத்திகள் செலாவணி வீதத்தில் ஏற்பட்ட மிகையான தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கியின் தலையீட்டினை அவசியமாக்கியது. 2018 செத்தெம்பர் இறுதியில் நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 7.2 பில்லியனாக அமைந்தது. இது 3.8 மாத இறக்குமதிகளுக்கு சமமானதாகக் காணப்பட்டது.

## அட்டவணை 1: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு [அ]

| வகை | செத் 2017 ஐ.அ.டொ. மில் | செத் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சனிவரி - செத் 2017 ஐ.அ.டொ. மில் | சனிவரி - செத் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 1,011 | 1,055 | 4.4 | 8,424 | 8,898 | 5.6 |
| இறக்குமதிகள் | 1,667 | 1,768 | 6.1 | 15,264 | 16,851 | 10.4 |
| வர்த்தக மீதி (தேறிய) | -656 | -713 | | -6,839 | -7,953 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 269 (ஆ) | 276 (இ) | 2.8 | 2,878 (ஆ) | 3,212 (இ) | 11.6 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 538 (ஈ) | 500 | -7.1 | 5,358 (ஈ) | 5,277 | -1.5 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (உ) | -62 | -7 | | 266 | 37 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 305 | 159 | | 4,715 | 4,305 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 187 | 25 | | 1,261 | 681 | |
| நீண்ட காலக் கடன்கள் | 118 | 135 | | 954 | 1,123 | |
| கூட்டுக் கடன்கள் | - | - | | 1,000 | - | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | | 1,500 | 2,500 | |
| ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதிப் பெறுகைகள் | - | - | | 167 | 252 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (ஊ) | | | | 567 | 1,353 | |
| திரண்ட நிலுவை | | | | 2,027 | -650 | |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை,

(அ) தற்காலிகமானது.

(ஆ) 2017 இற்கான நாளொன்றிற்கான தங்கியிருக்கும் காலம் மற்றும் சராசரிச் செலவு மதிப்பீடுகள் பற்றி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்டது.

(இ) 2018 இற்கான அதன் அளவீட்டுப் பெறுபேறுகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடு திருத்தம் செய்யப்படலாம்.

(ஈ) திருத்தப்பட்டது.


(உ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஊ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

### வர்த்தக நிலுவை

2018 செத்தெம்பரில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2017 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் மிதமான வேகமொன்றில் விரிவடைந்தமைக்கு ஏற்றுமதி வருவாய்களிலும் பார்க்க இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வளர்ச்சி கூடுதலாக இருந்தமையே காரணமாகும். ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2018இன் முதல் ஒன்பதுமாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை தொடர்ந்தும் விரிவடைந்து காணப்பட்டது.


**வரைபடம் 1: மாதாந்த வணிகப்பொருள் வர்த்தக செயலாற்றம் - 2018**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்**

**வரைபடம் 2: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




2018 செத்தெம்பர் மாதத்தில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்து நான்காவது மாதமாக ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சிக் காணப்பட்டன. மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 77 சதவீதத்திற்கு வகைகூறிய கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2018 செத்தெம்பர் மாதகாலப்பகுதியில் 9.4 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 10.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து கடலுணவு தவிர்ந்த பெரும்பாலும் அனைத்து வகைகளினதும் மோசமான செயலாற்றத்தினைப் பிரதிபலித்தது. கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழ் புடவை மற்றும் ஆடைகளிலிருந்தான வருவாய்கள் 2018 செத்தெம்பரில் அதிகரித்து ஐக்கிய அமெரிக்கா, கனடா, இந்தியா மற்றும் யப்பான் போன்ற பாரம்பரியமற்ற சந்தைகளிலிருந்து ஆடைக்கான கேள்வி குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமையினைப் பிரதிபலித்த ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான ஏற்றுமதிகளில் சிறிதளவு குறைப்பு பதிவுசெய்யப்பட்ட போதும் 2018 செத்தெம்பரில் பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதி அளவுகளில் குறைவு காணப்பட்ட போதும் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் கணிசமாக அதிகரித்தமைக்கு நீர்க்கல எரிபொருள் மற்றும் வானூர்தி எரிபொருள் என்பனவற்றின் உயர்ந்த ஏற்றுமதி விலைகள் காரணமாக அமைந்தன. 2018 செத்தெம்பரில் தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி, அடிப்படை உலோகங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பான பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்து கைத்தொழில் ஏற்றுமதிகளின் அதிகரிப்பிற்கு பங்களித்தன. எனினும், 2018 செத்தெம்பரில் இறப்பர் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு அனைத்து துணை வகைகளிலும் காணப்பட்ட குறைவடைந்த செயலாற்றமே காரணமாகும். மேலும், பொறிகள் மற்றும் எந்திர துணைக் கருவிகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் இம்மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. வேளாண்மை ஏற்றுமதிகளின் கீழ் 2018 செத்தெம்பரில் தேயிலையிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்து ஏற்றுமதி அளவுகளில் சிறிதளவு அதிகரிப்புக் காணப்பட்டமைக்கிடையிலும் சராசரி ஏற்றுமதி விலைகள் குறைவடைந்தமையினை பிரதிபலித்தது. இம்மாத காலப்பகுதியில் வாசனைத்திரவியங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் குறைவடைந்தமைக்கு கறுவா தவிர்ந்த பெரும்பாலும் மற்றைய அனைத்து வகைகளினதும் மோசமான செயலாற்றமே காரணமாகும். மேலும், தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு தேங்காய்த் துருவல் மற்றும் தேங்காய் எண்ணெய் போன்ற தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் குறைவடைந்தமையே காரணமாகவிருந்த வேளையில் தெங்கின் உள்ளீடு அல்லா உற்பத்திகள் வளர்ச்சியைக் காட்டின. எனினும், இம்மாத காலப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான உயர்ந்த ஏற்றுமதிகளின் காரணமாக கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன. 2018 செத்தெம்பரில் இலங்கையின் வணிகப்பொருள் ஏற்றுமதிகளுக்கான முன்னணிச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, இத்தாலி மற்றும் சேர்மனி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 52 சதவீதத்திற்கு வகைகூறின.

அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள்(அ)

| வகை | செத்தெம்பர் 2017 ஐ.அ.டொ. மில் | செத்தெம்பர் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - செத் 2017 ஐ.அ.டொ. மில் | சன - செத் 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **744.5** | **814.4** | **9.4** | **6,307.0** | **6,899.6** | **9.4** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 37.2 | 36.0 | (3.2) | 296.3 | 347.2 | 17.2 |
| விலங்குத்தீன் | 6.4 | 9.2 | 44.2 | 56.4 | 82.8 | 46.8 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 431.5 | 476.2 | 10.4 | 3,715.0 | 3,927.9 | 5.7 |
| இதில் ஆடைகள் | 407.3 | 444.7 | 9.2 | 3,495.4 | 3,666.9 | 4.9 |
| புடவைகள் | 17.2 | 24.4 | 41.7 | 155.1 | 190.4 | 22.7 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 7.1 | 7.2 | 1.9 | 64.5 | 70.7 | 9.6 |
| இறப்பர் உற்பத்திகள் | 76.5 | 71.8 | (6.1) | 614.6 | 656.2 | 6.8 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 21.5 | 19.2 | (11.0) | 188.5 | 214.5 | 13.8 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 35.3 | 32.6 | (7.5) | 277.4 | 328.4 | 18.4 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 6.6 | 7.2 | 8.5 | 144.8 | 98.3 | (32.1) |
| பெற்றோலிய உற்பத்திகள் | 40.2 | 65.9 | 64.1 | 292.8 | 453.8 | 55.0 |
| இரசாயன உற்பத்திகள் | 11.6 | 13.3 | 14.4 | 108.2 | 128.0 | 18.3 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 12.7 | 11.8 | (7.0) | 103.0 | 104.3 | 1.3 |
| அச்சிடல் பொருட்கள் மற்றும் எழுதுகருவிகள் | 6.2 | 4.1 | (34.5) | 34.2 | 23.3 | (31.8) |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 13.4 | 17.1 | 27.5 | 120.4 | 119.0 | (1.1) |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 6.3 | 6.6 | 5.3 | 53.4 | 57.3 | 7.2 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 13.1 | 15.5 | 18.7 | 85.4 | 123.5 | 44.7 |
| இரசாயன உற்பத்திகள் | 3.1 | 3.2 | 4.5 | 25.2 | 24.0 | (4.4) |
| ஏனையவை | 22.9 | 24.5 | 7.3 | 191.4 | 211.1 | 10.3 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **262.7** | **234.3** | **(10.8)** | **2,077.8** | **1,957.7** | **(5.8)** |
| தேயிலை | 136.9 | 122.5 | (10.5) | 1,139.6 | 1,092.8 | (4.1) |
| இறப்பர் | 2.9 | 2.1 | (26.6) | 31.6 | 25.1 | (20.3) |
| தேங்காய் | 33.0 | 28.7 | (13.0) | 273.1 | 238.1 | (12.8) |
| வாசனைத்திரவியம் | 48.9 | 43.7 | (10.5) | 297.5 | 269.3 | (9.5) |
| மரக்கறிகள் | 2.7 | 2.6 | (1.3) | 22.1 | 20.9 | (5.6) |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.2 | 3.1 | (4.2) | 26.7 | 26.7 | (0.0) |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 14.3 | 9.7 | (32.1) | 110.9 | 93.8 | (15.5) |
| கடலுணவு | 20.8 | 21.7 | 4.3 | 176.2 | 191.0 | 8.4 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **3.8** | **6.6** | **72.8** | **39.6** | **40.3** | **1.6** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,011.0** | **1,055.2** | **4.4** | **8,424.4** | **8,897.6** | **5.6** |


மூலங்கள்: இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

### வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

2018 செத்தெம்பரில் வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,768 மில்லியனுக்கு 6.1 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில்) அதிகரித்தமைக்கு எரிபொருள் மற்றும் ஊர்திகளின் இறக்குமதி மீது ஏற்பட்ட உயர்ந்த செலவினமே முக்கிய காரணமாகும். இடைநிலைப்பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் இம்மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் என்பனவற்றின் உயர்ந்த இறக்குமதி விலைகள் மற்றும் அளவுகள் ஆகிய இரண்டினதும் இணைந்த தாக்கத்தினைப் பிரதிபலித்தது. மேலும், புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள், வளமாக்கி மற்றும் இரசாயன உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் கணிசமாக அதிகரித்தது. எனினும், 2018 ஏப்பிறலில் தங்கத்தின் மீதான சுங்கத்தீர்வை விதிக்கப்பட்டமையிலிருந்து அவதானிக்கப்பட்ட போக்கின் தொடர்ச்சியாக தங்க இறக்குமதிகள் மீதான செலவினம் 2018 செத்தெம்பரில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், சீமெந்து சூளைக்கற்கள், இரும்பு மற்றும் உருக்கினை முக்கியமாகக் கொண்ட அடிப்படை உலோகங்கள் அதேபோன்று கோதுமை மற்றும் சோளம் என்பனவற்றின் இறக்குமதிகள் இக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. நுகர்வுப்பொருட்களின் கீழ் தனியாள் உந்து ஊர்திகளின் இறக்குமதி 2018 செத்தெம்பரில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், தொடர்ந்தும் அதிகரித்தமைக்கு 1,500 உருளை இயலளவிற்குக் குறைவான உந்து ஊர்திகளின் உயர்ந்த இறக்குமதிகள் காரணமாக அமைந்து 2018 ஓகத்து 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்த புதிய தீர்வை அமைப்பு நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னதாக அத்தகைய ஊர்திகளின் இறக்குமதிக்காக மேற்கொள்ளப்பட்ட அதிகரித்த கட்டளைகளின் தாக்கத்தினை பகுதியளவில் பிரதிபலித்தது. இக்காலப்பகுதியில் கலப்பு மற்றும் மின்னியல் உந்து ஊர்திகள் மீதான இற்குமதிச் செலவினமும் அதிகரித்தது. எனினும், தனியாள் ஊர்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் ஊர்திகளின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தவதற்காக அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் எடுக்கப்பட்ட கொள்கை வழிமுறைகளின் காரணமாக இனிவரும் மாதங்களில் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், வாசனைத்திரவியங்கள், மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள், சீனி, இனிப்புவகை போன்ற நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தன. மாறாக அரிசி இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்த உள்நாட்டு நிரம்பல் காரணமாக வீழ்ச்சியடைந்த வேளையில் காய்கறிகள் மற்றும் பாற்பண்ணை உற்பத்திகள் மீதான செலவினமும் வீழ்ச்சியடைந்தன. எனினும், 2018 செத்தெம்பரில் முதலீட்டுப் பொருட்கள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு எண்ணெய்த் தாங்கிகள், நீர்த் தாங்கிகள் மற்றும் பேருந்துக்கள் போன்ற வீதி ஊர்திகள் மீதான குறைந்த செலவினமே முக்கிய காரணமாக விளங்கியது. மேலும், பொறித் தொகுதிகள் மற்றும் கருவிகளின் இறக்குமதிகள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு மின்னியல் பொறிகள் மற்றும் கருவிகள், பொறியியல் கருவிகள் என்பன காரணமாக அமைந்த வேளையில் கட்டடட மூலப்பொருட்கள் மீதான செலவினம் அதிகரித்தமைக்கு இரும்பு, உருக்கு மற்றும் சீமெந்து என்பன வழிவகுத்தன. 2018 செத்தெம்பரில் இந்தியா, சீனா, ஐக்கிய அரபு எமிறேட்ஸ், யப்பான்

**வரைபடம் 3: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




மூலங்கள்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

மற்றும் மலேசியா என்பன முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 63 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதி மீதான செலவினம்(அ)**

| வகை | செத்தெம்பர் 2017 ஐ.அ.டொ.மில் | செத்தெம்பர் 2018 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) | சன - செத் 2017 ஐ.அ.டொ. மில் | சன - செத் 2018 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **328.9** | **379.3** | **15.3** | **3,279.0** | **3,820.6** | **16.5** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 131.2 | 91.0 | (30.6) | 1,335.7 | 1,239.2 | (7.2) |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 23.1 | 2.3 | (90.1) | 208.0 | 115.5 | (44.5) |
| இதில் அரிசி | 22.0 | 0.7 | (96.9) | 198.4 | 101.6 | (48.8) |
| சீனி மற்றும் சிற்றூண்டிகள் | 10.7 | 15.9 | 47.6 | 199.5 | 196.7 | (1.4) |
| மரக்கறிகள் | 28.0 | 15.2 | (45.8) | 263.6 | 235.5 | (10.6) |
| கடலுணவு | 18.3 | 14.0 | (23.8) | 166.1 | 150.0 | (9.7) |
| பால் உற்பத்திகள் | 23.5 | 12.9 | (45.0) | 226.4 | 244.1 | 7.8 |
| வாசனைத் திரவியங்கள் | 5.9 | 11.2 | 89.2 | 70.3 | 84.3 | 20.0 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 21.7 | 19.6 | (9.3) | 201.8 | 213.0 | 5.6 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 197.7 | 288.2 | 45.8 | 1,943.3 | 2,581.4 | 32.8 |
| தனிப்பட்ட ஊர்திகள் | 55.4 | 138.2 | 149.5 | 560.4 | 1,230.6 | 119.6 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 39.6 | 44.3 | 11.7 | 374.5 | 393.5 | 5.1 |
| ஆடை மற்றும் துணைப் பொருட்கள் | 22.2 | 22.7 | 2.5 | 284.5 | 237.4 | (16.6) |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 21.6 | 17.5 | (18.9) | 189.8 | 176.2 | (7.2) |
| வீட்டுச்சாதனங்கள் மற்றும் தளபாட வகைகள் | 14.1 | 16.9 | 20.1 | 133.4 | 129.0 | (3.3) |
| அச்சிட்ட பொருட்கள் மற்றும் காகிதாதிகள் | 4.8 | 3.5 | (27.0) | 28.6 | 29.5 | 3.2 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 40.1 | 45.1 | 12.7 | 372.1 | 385.2 | 3.5 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **949.4** | **1,056.0** | **11.2** | **8,221.2** | **9,412.8** | **14.5** |
| எரிபொருள் | 298.5 | 396.3 | 32.8 | 2,451.3 | 3,165.1 | 29.1 |
| இதில் மசகெண்ணெய் | 79.9 | 118.7 | 48.7 | 471.0 | 714.0 | 51.6 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 218.4 | 277.5 | 27.1 | 1,806.1 | 2,303.7 | 27.6 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 40.2 | 11.3 | (72.0) | 514.8 | 529.6 | 2.9 |
| இதில் தங்கம் | 32.0 | 0.1 | (99.7) | 434.7 | 438.1 | 0.8 |
| புடவைகள் மற்றும் ஆடைப் பொருட்கள் | 217.3 | 233.7 | 7.6 | 1,998.5 | 2,091.6 | 4.7 |
| இரசாயண உற்பத்திகள் | 63.4 | 69.1 | 9.0 | 613.3 | 671.0 | 9.4 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 49.7 | 50.0 | 0.6 | 457.7 | 521.8 | 14.0 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 42.0 | 49.0 | 16.7 | 353.6 | 394.8 | 11.6 |
| அடிப்படை உலோகங்கள் | 66.2 | 57.5 | (13.1) | 419.2 | 473.1 | 12.9 |
| கனிம உற்பத்திகள் | 23.6 | 7.6 | (67.7) | 145.2 | 137.3 | (5.4) |
| உணவுத் தயாரிப்புக்கள் | 22.3 | 26.1 | 17.1 | 223.0 | 234.0 | 5.0 |
| கோதுமை மற்றும் சோளம் | 39.3 | 36.7 | (6.7) | 264.5 | 272.6 | 3.1 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வளமாக்கி | 7.1 | 34.5 | 383.6 | 71.2 | 187.8 | 163.8 |
| ஏனையவை | 79.8 | 84.1 | 5.3 | 708.9 | 734.0 | 3.5 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **385.9** | **332.4** | **(13.9)** | **3,623.6** | **3,544.6** | **(2.2)** |
| பொறி மற்றும் கருவிகள் | 203.5 | 175.7 | (13.7) | 1,941.8 | 1,878.7 | (3.3) |
| கட்டடப் பொருட்கள் | 122.9 | 127.6 | 3.8 | 1,177.7 | 1,140.7 | (3.1) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 59.2 | 28.8 | (51.3) | 497.8 | 520.8 | 4.6 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.3 | 0.3 | 16.6 | 6.3 | 4.6 | (27.7) |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **2.4** | **0.7** | **(71.7)** | **139.9** | **73.0** | **(47.8)** |
| **மொத்த இறக்குமதி** | **1,666.7** | **1,768.4** | **6.1** | **15,263.7** | **16,851.1** | **10.4** |


மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

**நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்**


2018 செத்தெம்பரில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2.8 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தமைக்கு 2017 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் முக்கியமாக இந்தியா, மாலைதீவு மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகையின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக அமைந்தது. 2018இன் ஒன்பது மாத காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 1,731,922 ஆக விளங்கி, 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 11.6 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. 2018 செத்தெம்பரில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 276 மில்லியன்கள் என மதிப்பிடப்பட்டதுடன் ஒன்றுசேர்ந்த வருவாய்கள் 2018 முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 3,212 மில்லியன்களாக விளங்கின. அதேவேளை, 2018 செத்தெம்பரில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 7.1 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 500 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. இதன்விளைவாக, 2018இன் முதல் ஒன்பதுமாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 5,277 மில்லியனுக்கு 1.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

**வரைபடம் 4: சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து மூலங்கள்**




மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 5: சுற்றுலாவிலிருந்தான வருகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி


**நிதியியல் பாய்ச்சல்கள்**

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் தற்பொழுது இடம்பெற்றுவரும் சொத்துப்பட்டியல் மீள் சமநிலைப்படுத்தும் உபாயத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை இரண்டும் 2018 செத்தெம்பரில் வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்களை எடுத்துக்காட்டின. அரச பிணையங்கள் சந்தை, வெளிநாட்டு முதலீடுகளின் மீளப் பெறுகைகளுக்கு தொடர்ந்தும் உட்பட்டு செத்தெம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 152 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தது. இதன் காரணமாக தேறிய ஒன்றுசேர்ந்த வெளிப்பாய்ச்சல் 2018இன் முதல் ஒன்பதுமாத காலப்பகுதியின் இறுதியில் ஐ.அ.டொலர் 468 மில்லியன்களுக்கு அதிகரித்தது. அதேவேளை, முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தை இரண்டினதும் வெளிநாட்டு செலாவணி வெளிப்பாய்ச்சல்கள் உட்பட கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் வெளிநாட்டு முதலீடுகள் 2018 செத்தெம்பர்மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 7 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2018இன் முதல் ஒன்பதுமாத காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஐ.அ.டொலர் 37 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. இது முதலாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 73 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சலையும் இரண்டாந்தரச் சந்தையிலிருந்தான ஐ.அ.டொலர் 36 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலையும் உள்ளடக்கியிருந்தது. மேலும், 2018 செத்தெம்பர் காலப்பகுதியில் அரசாங்கத்திற்கான நீண்டகாலக் கடன்கள் ஐ.அ.டொலர் 63 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தமைக்கு கடன்களின் உட்பாய்ச்சலை கடன் மீள்கொடுப்பனவுகள் விஞ்சியமையே காரணமாகும்.

**பன்னாட்டு ஒதுக்குகள்**

2018 செத்தெம்பர் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 7.2 பில்லியனில் மதிப்பிடப்பட்டதுடன் இது 3.8 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது. வங்கித்தொழில் துறையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2018 செத்தெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 9.6 பில்லியனாக விளங்கி 5.1 மாத இறக்குமதிகளுக்குச் சமனானதாகக் காணப்பட்டது.

**வரைபடம் 6: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் திரண்ட நிலுவை**





மூலம்: இலங்கை மத்திய வங்கி

**செலாவணி வீத அசைவுகள்**

2018 நவெம்பர் 29 வரையான இவ்வாண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 15.1 சதவீதத்தினால் தேய்வடைந்தது. மேலும், குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கை ரூபா இக்காலப்பகுதியில் அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் தேய்வடைந்தது. ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா நலிவடைந்தமையானது முக்கியமாக உலகளாவிய ரீதியில் ஐ.அ.டொலர் பரந்த அடிப்படையொன்றில் வலுவடைந்தமையினையும் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான வெளிப்பாய்ச்சலையும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் இறக்குமதிச் செலவினத்திற்கான கேள்வி பிரதிபலித்தது.

**வரைபடம் 7: ஐ.அ.டொலரொன்றிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2017 | 2018 நவெ 29 வரை உயர்வு (+) / தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | -2.0% | -15.1% |
| யூரோ | -13.5% | -10.9% |
| பவுண் ஸ்ரேலிங் | -10.5% | -11.0% |
| யப்பானிய யென் | -5.1% | -14.5% |
| கனேடியன் டொலர் | -8.6% | -10.3% |
| அவுஸ்திரேலிய டொலர் | -9.0% | -9.3% |
| இந்தியன் ரூபா | -7.5% | -6.4% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி